மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு வேளை மக்கள் தொகை கூடினால், ஏற்கப்படுமா என்று உறுப்பினர் கேட்கிறார்.

மாண்புமிகு திரு. கோ.சி.மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும்.

பெயர் மாற்றம் செய்தல்

*.5971 திருமதி ஏஸ்.பி.சற்குணம்:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னையில் பழைய வண்ணாரப்பேட்டை புதிய வண்ணாரப்பேட்டை என்ற பெயர்களை மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) மொட்டைத்தோட்டம் முல்லைத் தோட்டமாக்கப் படுமா?

மாண்புமிகு திரு.கோ.சி.மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திருமதி எஸ்.பி.சற்குணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட சென்னையில், பழைய வண்ணாரப்பேட்டை, புதிய வண்ணாரப்பேட்டை என்ற பெயர்கள் நெடுங்காலமாக இருந்து வருகின்றன. அந்தப் பெயர்கள் சொல்லுகின்றபோதே பலருக்குச்சங்கடமாக இருக்கிறது. சாதாரண வழக்கில் வண்ணயம் பதி என்று நாங்கள் அழைத்து வருகிறோம். எனவே, முறைப்படி அதற்கு வேறு பெயர்கள் சூட்டினால் நலமாக இருக்கும். அந்தத் திட்டம் எதிர்காலத்தில் அமுல் படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த உணர்வைக் கொண்டிருக்கிறாரோ, அதே உணர்வை இந்த அரசும் கொண்டிருக்கிற காரணத்தால், அதுகுறித்துப் பரிசீலித்து, விரைவில் தக்க அறிவிப்பினை அரசு வழங்கும்.

திருமதி எஸ்.பி.சற்குணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்களுடைய கருத்துக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போல, 17-வது வட்டத்திம் மொட்டைத்தோட்டம் என்ற பகுதி இருக்கிறது. தோட்டம் என்றாலே செடிகளும், மலர்களுமாகத்தான் இருக்க வேண்டும்.

அங்கே சிங்காரத் தோட்டம் பகுதி உள்ளது; புல் தோட்டம் பகுதியும் இருக்கிறது. எனவே இது முல்லைத் தோட்டமாகத் தான் இருந்திருக்க வேண்டும். வழக்கிலே மொட்டைத் தோட்ட மாகி விட்டது. எனவே, மீண்டும் முல்லைத் தோட்டம் என பெயரிடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முளைத்தால் ஆக்கப்படும்.(சிரிப்பு)

9.40 மணி

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சென்னையாக இருக்கிற காரணத்தாலே கேட்கிறேன். தன்மானச் சிங்கம் என்று பெயர் பெற்ற பட்டிவீரன்பட்டி டபிள்யூ.பி.எஸ். சௌந்திரபாண்டியனார் தெரு என்று தான் பாண்டி பஜார் என்று அழைக்கப்படுகிற தெரு முன்பு இருந்ததாகவும், காலத்தால் மருவி அப்படி ஆகிவிட்டது என்றும் சொல்லுகிறார்கள். அது உண்மையா? உண்மையாயின் மீண்டும் அது சௌந்திர பாண்டியனார் தெரு என்று ஆக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் நாயர் சாலை. பனகல் பூங்கா என்று எல்லாம் இருக்கிற காரணத்தால், அதுவும் ஒரு காலத்திலே சௌந்திரபாண்டியன் அவர்கள் பெயரால் பாண்டியன் கடைத்தெரு என்று இருந்திருக்கலாம். ஒரு வேளை அப்படியில் லாமல் பாண்டிபஜார் என்று இருந்தாலும்கூட, அதைப் பாண்டியன் கடைத்தெரு என்று ஆக்குவதற்கு இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

சென்னை ஜார்ஜ் டவுன் கூட்டுறவு வங்கி

* 7972 திரு. உ.ரா. வரதராசன்;

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை ஜார்ஜ் டவுன் கூட்டுறவு வங்கியில் தவணை தவறிய கடன்கள் ரூபாய் ஒரு கோடிக்கு மேல் உயர்ந்து அந்த வங்கி நலிவுற்ற நிலையில் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) இந்த நிலைக்குக் காரணமாக இருந்த அந்த வங்கியின் முன்னாள் நிர்வாகிகள் இழைத்த ஒழுங்கீனங்கள் குறித்து நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(இ) இந்த வங்கியின் நிலைமையைச் சீர்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா ?